

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண் - 31

## அறிவிப்புகள்
## 2015 - 2016

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

மானியக் கோரிக்கை எண்–31

# அறிவிப்புகள்
# 2015–2016

திரு. முக்கூர் என். சுப்பிரமணியன்
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

## 1. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் "அரசு இ–சேவை மையங்கள்" ஏற்படுத்துதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** 6,461 கிராம ஊராட்சிகளில், தற்போது இயங்கிவரும் அரசு இ–சேவை மையங்களுடன், **கூடுதலாக 6,063 கிராம ஊராட்சிகளில் இச்சேவை மையங்கள் அமைக்கப்படும்.** இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் அரசு இ–சேவை மையங்கள் செயல்படும்.

## 2. ஒருங்கிணைந்த பணிப்போக்கு மற்றும் ஆவண மேலாண்மை அமைப்பு (Integrated Workflow and Document Management System – IWDMS)

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அரசு நிர்வாகத்தில், பொறுப்புடைமை, வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்த **ஒருங்கிணைந்த பணிப்போக்கு மற்றும் ஆவண மேலாண்மை அமைப்பு ரூபாய் ஒரு கோடி** செலவில் செயல்படுத்தப்படும்.

## 3. தமிழ் இணையக் கல்விக்கழகம் மூலம் புதிய தமிழ் மென்பொருள்கள் உருவாக்குதல்

- தமிழ் மொழித் தொழில்நுட்பம் சார்ந்த பல்வேறு மொழி ஆய்வு மென்பொருள்கள்,
- உலகெங்கும் வாழும் தமிழர்க்கு பயனளிக்கும் வகையில் உலகத்தரத்திலான மதிப்பீட்டுக் கருவிகள்,
- முழுமையான கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான மேலாண்மைத் தளம்,
- அரிய தமிழ் நூல்கள், ஓலைச் சுவடிகள், கல்வெட்டுகள், ஓவியங்கள் ஆகியவற்றின் மின்னுருவாக்கம்,

- தமிழ் மொழியியல் தரவகம் மற்றும் மின் அகராதி,
- கணினி, அலைபேசி மற்றும் திறன்பேசியில் தமிழ்ப்பாடங்கள், இலக்கணம் மற்றும் அகராதி ஆகியவற்றை கற்பிப்பதற்கான குறுஞ்செயலிகள்

– ஆகியவற்றை உருவாக்கிச் செயல்படுத்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூபாய் 2.5 கோடி** ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

**முக்கூர் என். சுப்பிரமணியன்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**